1970 செப்டம்பர் 3]

பட்டுச்சேலைகளைத் தயாரிக்கிறோம். ஆனால் இதற்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள் பெரும்பாலும் மைசூர் மாநிலத்திலிருந்து வருகிறது. ஹோசூர், தாளவாடி பகுதிகளில் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. நாம் எடுத்திருக்கும் முயற்சி, நம்முடைய பகுதியிலே இன்னும் கொஞ்சம் அதிகமாக உற்பத்தி செய்ய, மத்திய சர்க்கார் நமக்குத் தேவையான கைத்தறிப் பட்டை கச்சாப்பாட்டை வழங்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

Export of human hair

*226 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether the human hair export from this State has suffered a set back during the year 1969; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தலைமுடி ஏற்றுமதி இந்நாடு முழுவதிலுமே பொதுவாக குறைந்துள்ளது. அதற்கு காரணங்கள் பின்வருவனவாகும்:

(1) செயற்கைப் பொருள்கள் புகுத்தப்படுதல்.

(2) அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சீன முடி இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அத்தடை படிப்படியாக நீக்கப்பட்டு வருவதால், சீன நாட்டு தலைமுடி பெரும் அளவில், ஐக்கிய நாடுகளின் அங்காடிக்கு வருகிறது.

(3) இந்தோனீசியா, நேபாளம், பாகிஸ்தான் போன்ற பிறநாடுகள் தலைமுடி விற்பனையில் போட்டியிடுவதுமன்றி அதற்கான விலையையும் குறைத்துள்ளன.

திரு. ப. மகாதேவன்: மாண்புமிகு தலைவரவர்களே, ஹிப்பி நாகரீகத்தின் காரணமாக, ஆண்களும் நீளமாக சடைமுடி வளர்த்துக்கொள்ளும் நிலைமையிருப்பதால் முடிவெட்டாமல் இருப்பதைப்பற்றி தகவல் வந்திருக்கிறதா?

(பதில் இல்லை.)

DR. H. V. HANDE: This is a great source of foreign exchange. This was earning us a great deal till such time as the State Trading Corporation entered the field and afterwards there is a lot of confusion between the S.T.C. and the private entrepreneurs who were exporting this human hair previously. I so, may I know whether the State Government is seized of the matter? How is the State Government going to resolve this tangle and see that once again Tamil Nadu comes foremost in the export of human hair?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சென்னை துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியாகக்கூடிய தலைமுடியின் விலை மதிப்பு 1966–67-ல் 6 லட்சம்; 1967–68-ல் 26 லட்சம். கனம் அங்கத்தினர் சொல்லுவது போனற குறை தனியார் துறையில் ஏற்றுமதி செய்யப்படுகின்ற நேரத்தில் இருந்தது. எஸ்.டி.சி. மூலம் ஏற்றுமதி செய்யும்போது அவர்கள்

ஒரு ஃப்ளோர் பிரைஸ் போட்ட காரணத்தால் தங்களைப் பாதிக்கிறது என்றார்கள். பிறகு மத்திய அரசுக்கு அனுப்பினோம். மத்திய அரசும் காம்ப்ரமைஸ் ஃபார்முலா முறையில் முடிவு எடுக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

Sheriff of Madras

* 227 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the grounds on which the selection is made for the post of Sheriff of Madras?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 'மாநகரின் முதல் குடிமகன்' என்று அழைக்கப்படக்கூடிய தகுதி பெற்றவரும், நல்ல பதவியிலும், நிலைமையிலும் உள்ளவருமான ஒருவரை "ஷெரிப்" ஆக நியமிக்கத் தேர்ந்தெடுப்பதே இதுவரையிலும் நடைமுறையில் இருந்து வருகிற ஒரு மரபு ஆகும். அரசுப் பணியில் உள்ளவர்கள், ராணுவப் பணியில் உள்ளவர்கள், வழக்குரைஞர் தொழில் புரிபவர் ஆகியோர் நியமனத்திற்காகக் கருதிப் பார்க்கப்படுவதில்லை. தனியார் நிறுவனங்களில் பணியாற்றி ஊதியம் பெறுபவர்கள் நியமனத்திற்காகக் கருதி பார்க்கப்படுகின்றனர். மகளிரும், ஷெரிபாக நியமிக்கத் தகுதி பெற்றவராவர். இந்தப் பதவி கௌரவப் பதவியாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த ஷெரிப் பதவி அலங்காரப் பதவி, ஆங்கிலேயரின் அடிமைச் சாசனத்தை நினைவுறுத்தும் பதவி, தேவையில்லாத ஒன்று என்று இன்று ஆளும் கட்சியில் இருப்பவர்கள் அன்று எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் கூறினார்களே, அப்படிப்பட்ட அந்தப் பதவி தேவை என்று இந்த அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் கண்டனக் குரலைப்பற்றித் தெரியாது. ஷெரிப் பதவி நம்முடைய உயர்நீதி மன்றத்தில் ''Letters Patent Appeal'' என்ற வகையில் இடம் பெற்றிருக்கிறது. ''Letters Patent'' அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே இடம் பெற்றிருக்கிறது. இதற்கு தனியாக விதிமுறைகள் கிடையாது. கன்வென்ஷனாகத்தான் வைத்திருக்கிறோம். அந்தக் காலத்தில் இருந்த அத்தனையையும் எடுத்து விடுவது என்று முடிவு செய்ய முடியாது. அது எடுப்பது தேவை என்று இந்த அரசாங்கம் கருதினால் அப்போது அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

Water from Red Hills lake

* 178 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether any complaints have been received to the effect that water from the Red Hills lake, solely intended for the City's drinking water purposes had been illegally let out for irrigation for five or six days in January, 1969; and

(*b*) if so, the action taken thereon and the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) செய்தித் தாள்களில் இந்தச் செய்தியைக் கண்டதும், புழலேரிக்கு உரிய நான்கு மதகுகளையும் நிர்வாகப் பொறியாளரும்,